2020 பிப்ரவரி 19]

நாங்கள் பணிகளை ஆற்றிக்கொண்டிருக்கிறோம். எங்கள் புள்ளிவிவரங்கள் சரியாகத்தான் இருக்கின்றன என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன். பீகார் மாநிலத்தைப் பொறுத்தவரையில் 39.6 சதவீதம் இடைநிற்றல் இருக்கிறது. இதுதான் highest. *ஆகவே, ஒவ்வொரு மாநிலத்துடனும் ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது இந்திய அளவில் நான்காம் இடத்தில் தமிழகம் இருந்துகொண்டிருக்கிறது என்பதையும், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அரும்பணியின் காரணமாகவும், இந்தத் துறைக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற நிதியின் காரணமாகவும், கணினி, சைக்கிள் போன்றவற்றை மாணவ, மாணவிகளுக்கு இலவசமாக வழங்குவதன் காரணமாகவும் இடைநிற்றல் விகிதம் குறைவாக இருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 47, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

47—

புதிய துணை மின் நிலையம்

***22913—திரு. சு. ரவி:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, நெமிலி ஒன்றியம், நாகவேடு கிராமத்திற்கு புதிய துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரக்கோணம் தொகுதி, நெமிலி ஒன்றியம், நாகவேடு கிராமத்தில்

ஒரு துணை மின் நிலையம் வேண்டுமென்று கேட்டிருக்கின்றார். துணை மின் நிலையம் அமைக்க அரசால் உத்தேசிக்கப்பட்டு, நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.*

திரு. சு. ரவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்வெட்டு மாநிலமாக இருந்த தமிழகத்தை மின்மிகை மாநிலமாக மாற்றி, விவசாயிகளுக்குத் தடையில்லா மின்சாரம் வழங்கி, தமிழகத்தை முதன்மை மாநிலமாக உருவாக்கிட அல்லும் பகலும் அயராது உழைத்து, மூன்று ஆண்டுகள் முத்திரை பதித்து, நான்காம் ஆண்டு அடியெடுத்து வைக்கும் மக்களின் முதல்வர், விவசாயிகளின் பாதுகாவலர், எளிமைக்குச் சொந்தக்காரரர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ஐயா எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். அவருக்கு உறுதுணையாக இருந்து வரும் மாண்புமிகு OPS ஐயா அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது அரக்கோணம் தொகுதிக்குட்பட்ட நாகவேடு மற்றும் அதனைச் சுற்றியுள்ள மேல்பாக்கம், பருத்திபுத்தூர், சித்தேரி, கீழாந்துறை, மேலாந்துறை, சம்பத்துராயன்பேட்டை, சிறுணமல்லி, அரும்பாக்கம், ஒச்சலம், மேலக்காடு, பாடி போன்ற கிராமங்களில் நீண்ட நாட்களாகக் குறைந்த மின்னழுத்தம் நிலவி வருகிறது. விவசாயப் பெருங்குடி மக்களும், நெசவாளர்களும் மிகவும் சிரமப்பட்டு வருகிறார்கள். குறிப்பாக, கோடைக் காலங்களில் அதிகமாக பாதிப்படைகிறார்கள். அந்தப் பகுதிக்கு சுமார் 10 கிலோ மீட்டர் தூரமுள்ள விண்டர்பேட்டை S.S.–லிருந்து தனியாக ஒரு feeder–ம், புன்னை S.S.–லிருந்து தனியாக ஒரு feeder–ம் வருகிறது. ஒரு feeder–ல் பழுது ஏற்பட்டால், பழுதுபார்க்கும்வரை மின் தடையினால் கிராமங்கள் பாதிப்படைகின்றன. இதனால் நீண்ட நாட்களாக விவசாயிகளும், நெசவாளர்களும், பொது மக்களும் சிரமப்படுகிறார்கள். ஆகவே, இன்றைக்கு அந்தப் பகுதியிலே ஒரு துணை மின் நிலையம் அமைக்கப்பட வேண்டுமென்று தொடர்ந்து நான் வலியுறுத்தி வருகின்றேன்.

2020 பிப்ரவரி 19]

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அண்ணன் அவர்கள் அந்தப் பகுதியிலே ஒரு துணை மின் நிலையம் அமைக்க, இன்றைக்குத் தனியார் நிலம் வாங்கப்பட்டுள்ளது என்று தெரிவித்திருக்கிறார்கள். அதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தத் திட்டத்தை விரைவாகவும், மிகவும் அவசியமாகவும் நிறைவேற்ற வேண்டியுள்ளது. இன்றைக்கு மின்னல் வேகத்தில் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்ற ஐயா மாண்புமிகு எடப்பாடியார் அவர்களுடைய நல்லாட்சியிலே, மின்சாரத் துறையில் தனக்கென ஒரு முத்திரையைப் பதித்துக் கொண்டிருக்கிற மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள், அந்தத் திட்டத்தை விரைவாக நிறைவேற்றிட வேண்டுமென்று கேட்டு, அந்தத் திட்டம் எந்த கால அவகாசத்திற்குள் நிறைவேற்றித் தரப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோரிய அந்த கிராமத்தில் துணை மின் நிலையம் அமைக்க 1.22 ஏக்கர் பட்டா நிலம் கையகப்படுத்தப்பட்டிருக்கிறது. அங்கு 33/11 கிலோ வாட் துணை மின் நிலையம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதற்கு கூடிய விரைவில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, 6 மாத காலத்திற்குள் அப்பணிகளை முடிப்பதற்குண்டான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விண்டர்பேட்டையில் ஏற்கெனவே தனியாக ஒரு sub station–ஐக் கேட்டிருந்தார்கள். அது 33/11 கிலோ வாட் ஆக இருக்கின்றது. அதை 110 KV ஆக உயர்த்தித்தர வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அந்தப் பணியும் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆகவே, அதையும் விரைந்து முடித்துக் கொடுப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே இருக்கின்ற துணை மின் நிலையத்தில் 2X8 என்று சொல்லக்கூடிய 16 MVA மின்மாற்றிகள் இருக்கின்றன. ஆனால், அதனுடைய மின் பளு 11 MVA தான் இருக்கின்றது. இருந்தாலும்கூட, எதிர்காலத்தின் தேவையைக் கருதி, அந்த இடத்தில் ஒரு புதிய துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு அம்மாவின் அரசால் உத்தேசிக்கப்பட்டு, பட்டா நிலம் கையகப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.

திரு. சு. ரவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விண்டர்பேட்டை துணை மின் நிலையம் 1957 ஆம் ஆண்டு துவங்கப்பட்ட மிகப் பழமையான துணை மின் நிலையம். அந்தத் துணை மின் நிலையத்தை 110 KV–ஆகத் தரமுயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகச் மாண்புமிகு அமைச்சர் அண்ணன் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல; தற்போது மின்கம்பங்கள் நடுவதற்கு மனித சக்தி பயன்படுத்தப்படுகிறது. மனித சக்தி குறைவாக இருக்கிற காரணத்தால், ஒவ்வொரு கோட்டத்திற்கும் ஒரு JCB அல்லது crane போன்ற இயந்திரங்களை வாங்கித் தந்தால், மின் கம்பங்களை எல்லாம் விரைவாக நடுவதற்கு ஏதுவாக இருக்கும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒவ்வொரு கோட்டத்திற்கும் ஒரு crane அல்லது JCB இயந்திரத்தை வாங்கித் தருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியதுபோல, இப்போது மின் கம்பங்கள் நடுவதற்கு JCB–ஐ நாம் பயன்படுத்துகின்றோம். தேவையான இடங்களில் நாம் அந்த JCB–ஐ ஒப்பந்த அடிப்படையிலே பயன்படுத்திக் கொண்டிருக்கின்றோம். ஒவ்வொரு கோட்டத்திற்கும் அதை வாங்கிக் கொடுக்கின்றபோது, நிருவாகச் செலவு அதிகமாக ஏற்படுகின்றது. எனவே, பணிகள் தொய்வில்லாமல் விரைந்து நடப்பதற்கு எங்கே தேவைப்படுகிறதோ, அங்கே ஒப்பந்த அடிப்படையில் பயன்படுத்த அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கின்றது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள்.

2020 பிப்ரவரி 19]

முற்பகல் 10–20

திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 33/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையத்தை பி.வி. அய்யர் தெருவிலே அமைப்பதற்கு 2015 ஆம் ஆண்டு ஒப்புதல் அளிக்கப்பட்டது. அந்த இடம் காவல் துறைக்குச் சொந்தமானது என்பதால், இதுவரையில் அதற்கு அனுமதி அளிக்கப்படவில்லை என்று கடந்த 27–1–2019 அன்று இதே அவையில் நான் வலியுறுத்தினேன். இந்தக் கூட்டத்தொடர் முடிவதற்குள் மாற்று இடத்திலே அந்த துணை மின் நிலையத்தை அமைப்பதற்குண்டான அறிவிப்பு வெளியிடப்படும் என்று அப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருந்தார்கள். இதுவரையில் அதற்கு மாற்று இடம் அறிவிக்கப்படவில்லை. பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான இடம் அருகிலே இருக்கிறது. அந்தப் பகுதியிலே இருக்கின்ற மின் தேவைகளை அறிந்துதான், 2015 ஆம் ஆண்டே இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தீர்கள். நீங்கள் அதைச் செயல்பாட்டிற்குக் கொண்டு வருவதற்குள் அந்தப் பகுதியினுடைய மின் தேவை அதிகரித்து 33/11 கிலோ வாட் என்பது 110/11 கிலோ வோல்ட் அளவுக்குச் சென்றுவிடும். இதுபோன்ற நிலைமை நிறைய இடங்களில் உள்ளது. கொளத்தூரில்கூட 110/33 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் அமைப்பதற்கு 2007 ஆம் ஆண்டு ஒப்புதல் அளிக்கப்பட்டு, இதுவரையில் அந்தப் பணிகள் துவங்கப்படாத நிலையில் இருக்கிறது. ஆகவே, இதுபோன்ற பணிகளுக்கு, தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அந்தந்த மாவட்டத்திலே உள்ள* C.E. level–*ல் இருக்கிற அதிகாரிகளை ஒருங்கிணைத்து, மாதந்தோறும் ஆய்வுக் கூட்டங்களை நடத்தி, மின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும், விரைவாக துணை மின் நிலையங்களை அமைப்பதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய அந்த இடத்தை காவல் துறையினர் கொடுக்க மறுத்துவிட்டார்கள் என்று நான் ஏற்கெனவே சொல்லியிருக்கின்றேன். பொதுப் பணித் துறையினர் கொடுப்பார்கள் என்று எதிர்பார்த்தோம். "எங்களுக்குத்*

தேவை இருக்கிறது, பல கட்டடங்கள் கட்ட வேண்டும்” என்று சொல்லி அவர்களும் கொடுக்க மறுத்துவிட்டார்கள். இப்போது முஸ்லிம் ஜமாத்தில் துணை மின் நிலையம் அமைக்க இடம் கேட்டிருக்கின்றோம். அவர்களுடைய இடத்தில் ஆய்வு செய்து தருவதாக அவர்கள் வாய்மொழியாகச் சொல்லியிருக்கின்றார்கள். இன்னும் முழுமையாக அவர்கள் உத்தரவாதம் தரவில்லை. நான் எதிர்க்கட்சி, ஆளுங்கட்சி என்று பார்ப்பதில்லை என்று ஏற்கெனவே இந்தச் சட்டமன்றத்தில் பலமுறை சொல்லியிருக்கின்றேன். அந்தந்த தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர்கள் துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமென்று கேட்கும்போது, அவர்களும் அதற்கு ஒத்துழைத்தார்கள் என்று சொன்னால், சீரான மின்சாரம் கொடுப்பதற்கு வாய்ப்பாக இருக்கும். அதனால், நான் எங்களுடைய துறை அதிகாரிகளோடு நாளையதினமே கலந்தாலோசித்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேறு இடத்தை ஆய்வு செய்து கொடுப்பார்களென்றால், விரைந்து அதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எதிர்காலத் தேவையைச் சொல்லி, 33 கிலோ வோல்ட் திறனுக்கு பதிலாக 110 கிலோ வோல்ட் திறன் கொண்ட துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். அங்கே எந்த அளவிற்கு மின் பளு இருக்கின்றது என்பதை ஆய்வு செய்து, தேவை இருப்பின், அதை 110 கிலோ வோல்ட் திறன் அளவுக்கு உயர்த்திக் கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S. செம்மலை அவர்கள்.

திரு. S. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Green Power for Green Crop. அதாவது Solarisation of Pumpset என்கிற அந்தத் திட்டம் TANGEDCO-வினுடைய ambitious திட்டமாக இருந்து வருவதை நாம் நன்றாக அறிவோம். அந்தத் திட்டத்தின்கீழ், மத்திய எரிசக்தி நிறுவனம், அதேபோல, தமிழ்நாடு அரசு, விவசாயிகள் இணைந்து விவசாய நிலத்திலே Solar Plates, Solar Panels-ஐ அமைத்து, அதன்மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. அதாவது, துறையின் மூலமாக மும்முனை மின்சாரம் வழங்கப்படாத நேரத்தில், அந்த மின்சாரத்தைப்

பயன்படுத்த விவசாயிகளுக்கு வாய்ப்பாக இருக்கிறது. அதேசமயத்தில், மின் பகிர்மானக் கழகத்திற்கும் மின்சாரம் மிச்சப்படுகிறது. எனவே, இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துகிற நிலையில், விவசாயிகளுக்கும் பலனளிக்கிறது; மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கும் பயன்படுகிறது. எனவே, இந்தத் திட்டத்திற்கு விவசாயிகளிடம் நல்ல வரவேற்பு இருக்கிறதா? இந்தத் திட்டத்தினுடைய செயலாக்கம் எந்த நிலையில் இருக்கிறது என்பதை நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, இப்போது மத்திய அரசு KUSUM என்ற ஒரு திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. அதில் மாநில அரசு மற்றும் மத்திய அரசின் பங்களிப்போடு, விவசாயிகளினுடைய பங்களிப்பு இருந்தால், அதை உடனடியாக வழங்கலாம் என்று சொல்லியிருக்கிறது. முதற்கட்டமாக, தமிழ்நாடு மின்சார வாரியம் TEDA மூலமாக அதை முழுமையாகச் செயல்படுத்த வேண்டுமென்பதற்காக, 20,000 பேருக்கு முன்னுரிமை அடிப்படையில் அதை நாங்கள் கோரவிருக்கின்றோம். ஏற்கெனவே, நாம் மின்சாரம் கொடுத்திருக்கின்றோம். அவர்களுக்குத் தேவையாக இருந்தாலும் சரி, புதியதாகப் போடுவதாக இருந்தாலும் சரி, அவர்களின் தேவைக்குமேல் இருப்பதை மின்சார வாரியத்திற்குக் கொடுக்க வேண்டுமென்று சொன்னால், அதற்கு என்ன விலை நிர்ணயிக்க வேண்டுமென்பதற்காக TNERC–ல் நாங்கள் apply செய்திருக்கின்றோம். அதனுடைய தீர்ப்பு வந்ததற்குப் பின்னால்தான், அதை முழுமையாக எடுக்க முடியும். இருந்தாலும், விவசாயிகளுக்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல Solar மின் திட்டத்தை ஊக்குவிக்கின்ற வகையில், மிக வேகமாக திட்டத்தைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 48, மாண்புமிகு உறுப்பினர் திரு. C.V. சேகர், மாண்புமிகு நகராட்சி